ॐ

ஓம்

ஸ்ரீ குருப்யோ நம :

# ஸ்ரீ ஸ்வாமீ சித்பவாநந்த ஆச்ரமம்

## வேதாந்த சாஸ்த்ர ப்ரசார ட்ரஸ்ட்
(பதிவு எண்: 226 / 1992)




சத்திரப்பட்டி சாலை,
வேதபுரீ, தேனி. - 625 531






ஓம்
ஸ்ரீ குருப்யோ நம:

# உள்ளம் தோறும் வள்ளுவம்

## வள்ளுவம் வழங்கும் வாழ்வியல்
## ஸனாதன நெறியில் வள்ளுவம்

### அறத்துப்பால்

SRI SWAMI CHIDBHAVANANDA ASHRAMAM
VEDANTA SASTHRA PRACHARA TRUST
VEDAPURI, THENI-625 531-TAMIL NADU

# ஸ்ரீஸ்வாமீ பூர்ணாநந்தர்

## பூஜ்யஸ்ரீ ஓங்காராநந்த மஹாஸ்வாமிகளின் சீடர்

நாள் :
11, தை 2026

Date:
25, January 2026



www.vedaneri.org

வகுப்பு 21

# அறத்துப்பால் - இல்லறவியல்
# அதிகாரம் : 15

## பிறனில் விழையாமை

காமமயக்கத்தால் பிறருடைய இல்லாளை விரும்பாமை

- இஃது ஒழுக்கமுடையவர்களிடத்திலேயே இருக்கும் என்பதால் ஒழுக்கமுடைமையின் பின் வைக்கப்பட்டது.
- எதிரியை வெல்வதைவிட காமத்தை வெல்வது அரிதாகலின் ஒழுக்கங்களில் முதலாவதாகச் சொல்லப்படுகிறது.




குறள்கள் : 1 - 6 பிறனில் விழைதலின் குற்றம்

1. அறிவில்லாதவன். அவனிடத்து அறனும் பொருளும் இல்லை.
2. பெருமூடன். அறம், பொருள், இன்பம் இல்லை.
3. இறந்தவன். வாழ்க்கை பயனற்றது.
4. பெருமை நீங்கி சிறுமை சேரும்.
5. குடிப்பழி வரும்.
6. பகை, பாவம், அச்சம், பழி நீங்காது. இருமைப் பயனையும் இழப்பான்.

குறள்கள்: 7-10 பிறனில் விழையாமையின் குணங்கள்

1. அறம் தவறாதவனே இல்வாழ்வான்
2. புண்யமும் சிறந்த ஒழுக்கமும் ஆகும்.
3. எல்லா நலங்களுக்கும் உரியவர். இருமையும் நன்மை.
4. சிறந்த நற்குணம்.



## 1.பிறன்பொருளாம் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்து அறம்பொருள் கண்டார்கண் இல்.

பிறருக்கு உரியவளை விரும்பி நடக்கின்ற அறியாமையானது அறநூல், பொருள் நூல் இரண்டையும் முறையாகக் கற்று அறிந்தவர்களிடத்தில் இல்லை.

பிறன்பொருள் = பிறருக்கு உரிமையான பொருள்.
பெட்டு = விரும்பி
பேதைமை = அறியாமை
அறம்பொருள் = அறம் கூறும் நூல்கள், பொருள் கூறும் நூல்கள். இது காரியவாகு பெயர்.
கண்டார் = ஆராய்ந்து அறிந்தார் - முறையாகக் கற்றவர்.

ஒழுக்கமின்மை அறிவின்மையின் விளைவு. ஆகவே ஒழுக்கமின்மையைப் பேதைமை என்றார்.

அறிவுடையவர்களிடம் ஒழுக்கக்கேடில்லை என்பதையும் அறிவு கல்வி, கேள்விகளால் வருவது என்பதை அறம்பொருள் கண்டார் என்பதன் மூலமும் குறிப்பிட்டார்.




## 2. அறன்கடை நின்றாருள் எல்லாம் பிறன்கடை நின்றாரில் பேதையார் இல்.

(காமத்தின் காரணமாக) பாவத்தின்பக்கம் நிற்கும் எல்லாருள்ளும் பிறரது மனைவியை விரும்பி அவரது வாசலில் நின்றவர் போல மூடர் இல்லை.

அறன்கடை = அறத்தின் பின்னே = அறன் அல்லாத பாபச்செயல்.

அறம், பொருள் இழத்தலோடு அச்சத்தால் இன்பமும் இழக்கின்றார் ஆதலால் பெரும்பேதையர் என்றார்.

அறம், பொருள், இன்பம் மூன்றையும் இழத்தலால் பெருமூடர் ஆவார்.



## 3.விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரின் தீமை புரிந்தொழுகு வார்.

நிச்சயமாகத் தெளிந்த ஒழுக்கமுடைய பிறன்மனைவியிடத்தில் தவறான விருப்பத்தோடு நடப்பவர் நிச்சயமாக இறந்தவரைவிட வேறானர் அல்லர். (செத்தவரே ஆவார், அவரது வாழ்வு வீணானது என்பது கருத்து.)

விளிந்தார் = இறந்தவர்
தெளிந்தார் = நல்லொழுக்கம் உடைய பிறன்மனையாள்.
மன்ற = நிச்சயமாக = உறுதியாக.

அறம், பொருள், இன்பம் மூன்றும் இன்மையால் இறந்தார் என்றார்.



# 4.எனைத்துணையர் ஆயினும் என்னாம் தினைத்துணையும் தேரான் பிறனில் புகல்.

(காமமயக்கத்தால்) சிறிதளவேனும் தமது குற்றத்தை அறியாது பிறரது மனைவியிடத்துச் செல்லுதல் எவ்வளவு பெருமை உடையவராக இருந்தாலும் ஒருவனுக்கு பெருங்கேடாக முடியும்.

என்னாம் = பெருங்கெடுதியாக முடியும்.

இந்திரன் தம்பெருமை கெட்டு இழிவை அடைந்தது போல பெருந்தீமையாய் முடியும்.

பிறனில் விழைபவர் பெருமை கெட்டு சிறுமை அடைவர்.



## 5.எளிதென இல்லிறப்பான் எய்தும் எஞ்ஞான்றும் விளியாது நிற்கும் பழி.

அடைதல் எளிது என்று பிறனது மனைவியினிடத்து செல்லுபவன் அழிதல் இல்லாமல் எக்காலமும் நிற்கும் பழியை அடைவான்.

இல்லிறத்தல் = பிறர்மனைவியிடத்து தவறாக நடத்தல்.
பழி = அவன் குலத்திற்கு வரும் இழிச்சொல்.

குடிப்பெருமை கெட்டு பழி நீங்காது நிற்கும்.



## 6.பகைபாவம் அச்சம் பழியென நான்கு
## இகவாவாம் இல்லிறப்பான் கண்.

பிறரது மனைவியிடத்து தவறாக நடப்பவனிடத்தில் பகை, பாவம், பயம், குடிப்பழி என்னும் இந்நான்கும் ஒருபோதும் நீங்காது இருக்கும்.

இகவாவாம் என்றதனால் இருமைப்பயன்களையும் இழப்பான் என்பது பெறப்பட்டது.

இருமைப் பயனும் இல்லை.

இவை ஆறு பாட்டாலும் பிறனில் விருப்புவனிடத்து வரும் குற்றம் கூறப்பட்டது.



## 7. அறனியலான் இல்வாழ்வான் என்பான் பிறனியலாள் பெண்மை நயவா தவன்.



இன்னொருவனுக்கு உரிமையாக அவனது இயல்பிலே நிற்பவளது பெண்தன்மையை விரும்பாதவன் அறமாகிய இயல்போடு கூடிவாழும் இல்வாழ்வான் என்று சொல்லப்படுவான்.

அறன் இயலான் = அறத்தை இயல்பாக (ஸ்வபாவமாகக்) கொண்டவன்.
பிறன் இயலாள் = பிறனது வாழ்க்கைத் துணையாக அவனுடன் இயல்பாக இணைந்து வாழும் மனையாள்.

பிறன்மனைவியை விரும்பாதவன் தம் இல்வாழ்வின் அறத்தைக் கடைபிடிப்பவன் எனப்படுவான்.

## 8.பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு.

பிறனது மனைவியைச் சேர விரும்பாத பெரிய ஆண்தன்மையானது நற்குணங்களால் நிறைந்தவருக்கு அறமும் சிறந்த ஒழுக்கமும் ஆகும்.

பேராண்மை - புறப்பகையை வெல்வதை விட அகப்பகையாகிய காமத்தை வெல்வது கடினமாகையால் பிறன் இல் விரும்பாமை பேராண்மை எனப்பட்டது.

பிறன்மனை நோக்கலைச் செய்யாமையே புண்ணியமும் சிறந்த ஒழுக்கமும் ஆகும்.




## 9.நலக்குரியார் யாரெனின் நாமநீர் வைப்பில் பிறற்குரியார் தோள்தோயா தார்.

அச்சம் தரும் கடலால் சூழப்பட்ட பூவுலகில் எல்லா நன்மைகளையும் பெறுவதற்கு உரியவர் யார் என்றால் இன்னொருவனுக்கு உரிமையான பெண்ணின் தோள்களைச் சேராதவர் ஆவார்.

நலக்கு உரியார் = நலத்திற்கு உரியவர்.
நாம நீர் = நாம் நீர். நாம் (உரிச்சொல்) = அச்சம்.
அகலம், ஆழம், பொருள் (உப்பு, முத்து, பவளம், சங்கு போன்ற பொருள்கள்) இவற்றால் அளவிடப்படாமையின் நாமநீர் (அச்சம் தரும் கடல்) என்றார்.

பிறனில் விரும்பாதவர் இருமையிலும் நன்மை அடைவார்.



# 10. அறன்வரையான் அல்ல செயினும் பிறன்வரையாள் பெண்மை நயவாமை நன்று.

ஒருவன் அறத்தை தனக்குரியதாகச் செய்யாமல் பாவச்செயல்களைச் செய்தாலும் பிறன் எல்லையில் வாழும் பெண்ணை விரும்பாமை நல்லது.

வரை = உரியது, எல்லை.
நயவாமை = விரும்பாமை.

ஒருவன் மற்ற பாவச்செயல்களை விலக்க முடியாவிட்டாலும் பிறனில் விரும்புதல் எனும் பாபத்தை செய்யாதிருத்தல் நன்மை பயக்கும்.

இவை நான்கு பாட்டாலும் பிறனில் விழையாதவனிடத்தில் உண்டாகும் குணம் - நன்மை - கூறப்பட்டது.



ஓதற் கெளிதாய் உணர்தற் கரிதாகி
வேதப் பொருளாய் மிகவிளங்கித்– தீதற்றோர்
உள்ளுதொ றுள்ளுதொ றுள்ளம் உருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு.

(மாங்குடி மருதனார்)

1. Youtube Channels:

   Swami Omkarananda

   Vedapuri Events

   Swami Purnananda Tamil

2. Instagram - swami om karananda

3. Facebook - Swami omkarananda

4. Facebook Group - Theni Swami Chidbhavananda Ashramam

5. Whatsapp Channel - Theni Swami Chidbhavananda Ashramam

94430 51910

www.vedaneri.org

vedapuricamps@gmail.com

